**மதுக்கரை நகராட்சியில் 23.11.2023ம் நாள் நடைபெற்ற சாதாரண மன்றக்கூட்டத்தின் தீர்மான நகல்கள்.**

**மன்றப் பொருள் எண்.01**

மதுக்கரை நகராட்சி மன்றத் தீர்மானம் எண்.140 நாள்.21.04.2023 ன்படி மன்றத்தால் அனுமதிக்கப்பட்டதற்கிணங்க, இவ்வலுவலக செயல்முறை ந.க.எண்.1570/2022/எச்1 நாள்.26.04.2023ன்படி மதுக்கரை நகராட்சி பகுதியில் உள்ள 1 முதல் 27 வார்டுகளிலும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ள திருவாளர். ஜெயசூர்யா இன்டஸ்ட்ரீஸ், திருப்பூர் என்கிற வெளிக்கொணர்வு முகமை நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டது.

இப்பணியில் வெளிக்கொணர்வு முகமை தூய்மைப் பணியாளர்கள் 70 நபர்கள், தூய்மைப் பணி மேற்பார்வையாளர்கள் 4 நபர்கள், ஓட்டுநர்கள் 9 நபர்கள் இப்பணிக்கான வாகனங்கள், தளவாடப்பொருட்கள் மற்றும் பணியாளர்களுக்கு சீருடை உள்ளிட்ட பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கவும், அவர்களுக்கான பணி உத்திரவில் நிபந்தனையாக தெரிவிக்கப்பட்டிருந்தது. மேற்கண்ட நிபந்தனைகளின்படி, போதிய அளவில் பணியாளர்கள், வாகனங்கள், தளவாடப் பொருட்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் எதுவும் உரிய காலத்தில் வெளிக்கொணர்வு முகமை நிறுவனத்தாரால் வழங்கப்படவில்லை. இதனால் நகரில் பெருமளவில் திடக்கழிவுகள் ஆங்காங்கே தேங்கி பொது மக்கள் மற்றும் பொது சுகாதாரத்திற்கும் கேடு விளைவிக்கும் வகையில் உள்ளது. இது தொடர்பாக மேற்கண்ட வெளிக்கொணர்வு முகமைக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரை மற்றும் நேரடி அறிவுரையின்படி அறிவிப்புகள் வழங்கியும் அன்னாரின் பணியில் எவ்வித முன்னேற்றமும் இல்லை.

மேலும், ஒப்பந்ததாரருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியான குப்பைகளை தரம் பிரித்து மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை சேகரமாகும் மையத்திற்கு சேர்க்கப்பட வேண்டும். ஆனால் குப்பைகளை தரம் பிரித்தும் மற்றும் வார்டுகளில் குப்பைகள் தேங்காமல் இருப்பதற்கும் தொடர்கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்படவில்லை. இதனால் நகர்மன்றத் தலைவர், துணைத்தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் பல புகார்கள் வந்து கொண்டே இருக்கிறது. இப்புகார் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு பலமுறை நேரில் அறிவுறுத்தியும், எழுத்து பூர்வமாக அறிவிப்புகள் வழங்கப்பட்டும் நாளது தேதி வரை தூய்மை பணியில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை. இது குறித்து இவ்வலுவலகத்தால் வழங்கப்பட்ட அறிவிப்புகளுக்கு நம்பத்தகும் வகையில் விளக்கம் ஏதும் அளிக்கப்படவில்லை. ஒப்பந்ததாரரின் மேற்பார்வையில் குப்பைகளை தரம் பிரிக்காமல் உரக்கிடங்கில் கொட்டப்பட்டுள்ளது என்பதுடன் ஒப்பந்ததாரர்களுக்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியினை திறம்பட செய்யாததால் நகராட்சிக்கு பொது மக்கள் மத்தியில் அவப்பெயர் ஏற்பட்டு வருகிறது.

மதுக்கரை நகராட்சி பாலக்காடு மெயின் ரோடு இரு மாநிலங்களுக்கான இணைப்பு சாலையாக அமைந்துள்ளதுடன் புகழ்பெற்ற தர்மலிங்கேஸ்வரர் கோயில் அமைந்துள்ளதால் முக்கிய பிரமுகர்கள் அடிக்கடி வந்து செல்கின்ற நகரமாகும். எனவே நகரின் பொது மக்களின் சுகாதார நலன் கருதியும், நகரின் வணிக மேம்பாடு நோக்கத்திற்காகவும் தூய்மைப் பணிகளை சீரிய அளவில் தினமும் தொய்வில்லாமல் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை கட்டாயமாக ஏற்படுகிறது.

இந்நகராட்சியின் தூய்மை பணியை மேற்கொள்வதற்கான பொறுப்பேற்றுக் கொண்ட திருவாளர்கள் ஜெய்சூர்யா இண்டஸ்ட்ரீஸ், திருப்பூர் நிறுவனத்திற்கு பல சந்தர்ப்பங்கள் அளித்தும் தூய்மைப் பணிகளில் எதிர்பார்த்த அளவிற்கு திருப்தியான முன்னேற்றம் இல்லாதது வருந்ததக்கதாகும்.

எனவே, பொதுமக்களின் சுகாதார நலன் கருதி மேற்கண்ட வெளிக்கொணர்வு முகமை ஒப்பந்தத்தை இரத்து செய்யவும், அவ்வாறு இரத்து செய்யப்பட்ட நாளிலிருந்து பொது சுகாதார வேலை பாதிப்படையாத விதத்தில் 01.05.2023க்கு முன்னர் தூய்மைப் பணிகள் மேற்கொண்டுள்ள வகையில் ஏதேனும் ஒரு சுய உதவி குழுக்கள் மூலமாக 1 முதல் 27 வார்டுகளில் பழைய ஊதிய விகிதத்திலேயே 01.12.2023 முதல் தூய்மைப்பணிகள் மேற்கொள்ளவும் அதற்கு ஏற்படும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1570/2023/எச்1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. திருவாளர்கள். ஜெய் சூர்யா இண்டஸ்ட்ரீஸ், திருப்பூர் அவர்களுக்கு வழங்கிய தூய்மைபணிக்கான வெளிக்கொணர்வு முகமை/ ஒப்பந்தத்தை ரத்து செய்யவும். இப்பணிக்கு புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.284</u>**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒ/ம்) நா. நூர்ஜஹான்
நகர் மன்றத்தலைவர்
மதுக்கரை நகராட்சி

இடம் : மதுக்கரை

நாள் : 23.11.2023

---

//உண்மை நகல் உத்திரவுபடி//

ஆணையாளர்

மதுக்கரை நகராட்சி